C24391

29 MAR 2022

# தமிழ் வளர்ச்சித் துறை

அனுப்புநர்

திரு.செ. சரவணன், இ.ஆ.ப

தமிழ் வளர்ச்சி இயக்குநர், (மு.கூ.பொ)

தமிழ் வளர்ச்சி இயக்ககம்

தமிழ் வளர்ச்சி வளாகம் முதல் தளம்,

தமிழ்ச்சாலை, எழும்பூர்,

சென்னை-600 008.

பெறுநர்

இயக்குநர்,

பள்ளிக்கல்வி இயக்ககம்,

கல்லூரிச் சாலை,

சென்னை-6.

திருவள்ளுவராண்டு 2053 / பிலவ / பங்குனி -14

ந.க.எண். 2673 /ஆ.மொ.4 / 2022, நாள்:28 .03.2022

ஐயா,

பொருள்: தமிழ் வளர்ச்சித் துறை – 2021-2022ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு – நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களின் பிறந்தநாளன்று மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்திப் பரிசுகள் வழங்குதல் – அவ்வகையில் 2022-2023ஆம் நிதியாண்டிற்கு அண்ணல் அம்பேத்கர் அவர்களின் (14.04.2022) பிறந்தநாளையொட்டி ஏப்ரல் 19ஆம் நாள் பேச்சுப் போட்டிகள் நடத்துதல் - அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பள்ளி மாணவர்களுக்கு மாவட்ட அளவில் பேச்சுப்போட்டிகள் நடத்தி பரிசுகள், பாராட்டுச் சான்றிதழ் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:

1. தமிழ் வளர்ச்சி துறை மானியக்கோரிக்கை எண்.46 அறிவிப்பு எண். 17, நாள்.31.08.2021
2. 17.11.2021ஆம் நாளிட்ட தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (தவ1.1)துறை, அரசாணை (நிலை) எண்.151
3. 17.03.2022 ஆம் நாளிட்ட தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கடிதம்

------

தமிழ் வளர்ச்சித் துறையின் 2021-2022ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு தொழில்கள், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப்பண்பாடு, தொல்லியல் துறை

அமைச்சரால் சட்டமன்றப் பேரவையில் 31.08.2021ஆம் நாளன்று பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது. (அறிவிப்பு எண்.17)

'நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களான மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கருத்துக்களையும் சமூகச் சிந்தனைகளையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் வண்ணம் ஆண்டுதோறும் அவர்களது பிறந்தநாளன்று மாவட்ட அளவில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசு, பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கான கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டு அரசின் ஆணை பெறப்பட்டு, 2021-2022இல் மகாத்மா காந்தியடிகள்(2.10.2021), ஜவகர்லால் நேரு(23.11.2021) ஆகியோரின் பிறந்த நாளில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டி நடத்தி பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெற்றன.

தற்போது 2022-2023ஆம் ஆண்டிற்கு அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு அரசின் ஆணை எதிர்நோக்கப்பெறுகிறது.

அவ்வகையில் 2022 – 2023ஆம் ஆண்டிற்கு மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கு **அனைத்து மாவட்டங்களிலும் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் (14.04.2022) பிறந்தநாளையொட்டி ஏப்ரல் 19ஆம் நாளன்று பேச்சுப் போட்டி நடைபெற உள்ளது.**

பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்பெறும் பேச்சுப் போட்டியில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் பங்கேற்கும் வகையில் முதன்மைக் கல்வி அலுவலர் வாயிலாக பள்ளிகளுக்கு சுற்றறிக்கை அனுப்பி, முதற்கட்டமாக கீழ்நிலையில் பேச்சுப்போட்டி நடத்தி மாணவர்களைத் தெரிவு செய்து மாவட்ட அளவிலான போட்டியில் பங்கேற்க 25 மாணவர்களுக்கு மேல் மிகாமல் இருக்கும் வகையில் அந்தந்த மாவட்டத்தின் தமிழ் வளர்ச்சித்

துணை இயக்குநர்கள் / உதவி இயக்குநர்களுக்கு பங்கேற்கும் மாணவர்களின் பெயர்ப்பட்டியலை அனுப்பப்பெற வேண்டும்.

மேலும், பின்வரும் மாவட்டங்களில் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் /உதவி இயக்குநர் பணியிடங்கள் ஒழிவாக உள்ளன.

| துணை இயக்குநர்கள் | உதவி இயக்குநர்கள் | |
|---|---|---|
| 1) மதுரை | 1) கன்னியாகுமரி | 11) கிருட்டினகிரி |
| 2) திருப்பூர் | 2) கரூர் | 12) நாகப்பட்டினம் |
| | 3) நாமக்கல் | 13) தருமபுரி |
| | 4) தஞ்சாவூர் | 14) நீலகிரி |
| | 5) புதுக்கோட்டை | 15) இராணிப்பேட்டை (புதிய மாவட்டம் த.வ.உ.இ அலுவலகம் தொடங்கப்படவில்லை) |
| | 6) இராமநாதபுரம் | 16) திருப்பத்தூர் (புதிய மாவட்டம் த.வ.உ.இ அலுவலகம் தொடங்கப்படவில்லை) |
| | 7) திண்டுக்கல் | 17) கள்ளக்குறிச்சி (புதிய மாவட்டம் த.வ.உ.இ அலுவலகம் தொடங்கப்படவில்லை) |
| | 8) அரியலூர் | 18) செங்கல்பட்டு (புதிய மாவட்டம் த.வ.உ.இ அலுவலகம் தொடங்கப்படவில்லை) |
| | 9) திருவாரூர் | 19) தென்காசி (புதிய மாவட்டம் த.வ.உ.இ அலுவலகம் தொடங்கப்படவில்லை) |
| | 10) காஞ்சிபுரம் | 20) மயிலாடுதுறை (புதிய மாவட்டம் த.வ.உ.இ அலுவலகம் தொடங்கப்படவில்லை) |

இம்மாவட்டங்களில் முதன்மைக் கல்வி அலுவலரால் நியமிக்கப்பெறும் அரசுப்பள்ளி தலைமையாசிரியர் வாயிலாக இப்போட்டியினை நடத்தவும் பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்களைத் தெரிவுசெய்ய 3 நடுவர்களை நியமிக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன். மேலும், இவர்களுக்கு உதவியாக அம்மாவட்டத்தின் கூடுதல் பொறுப்பு துணை இயக்குநர் / உதவி இயக்குநர் முன்னேற்பாடுப் பணிகளுக்கும் மற்றும் போட்டி நாளன்று அம்மாவட்டத்தின் தமிழ் வளர்ச்சித் துறைப் பணியாளர்கள் துணை புரிவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போட்டிக்கான தலைப்புகள் போட்டி நடத்தப்பெறும் நாளன்று அறிவிக்கப்பெறும். மேலும் இப்பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ.5000/-மும், இரண்டாம் பரிசு ரூ.3000/-மும், மூன்றாம் பரிசு ரூ.2000/-மும், வழங்கப்பெறும். மேலும் இப்போட்டியில் வெற்றிபெறும் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு சிறப்பு பரிசு ரூ.2000/- வீதம் இரண்டு பேருக்கு வழங்கப்பெறும். அரசாணை வரப்பெற்றவுடன் பரிசுத்தொகையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெறும் என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

28/3/22

தமிழ் வளர்ச்சி இயக்குநருக்காக

சுமா
28.3.22

படி

அனைத்து மண்டில/மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்கள்/உதவி இயக்குநர்கள்

<u>ந.க. எண். 024391/ எம் / இ1 / 2022, நாள்: 01.04.2022</u>

(நகல்) தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் / மாவட்ட கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. மேற்படி கடிதத்தை முழுமையாக படித்து அதில் குறிப்பிட்டுள்ளவாறு பேச்சுப் போட்டிகளை நடத்திடுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் / மாவட்ட கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணை இயக்குநர்
(நாட்டு நலப்பணித் திட்டம்) I/C

பெறுநர்

1. அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள்.

01/04/22